செ. வெ. எண் : 283 நாள் : 27. 3. 2010

# பத்திரிக்கை செய்தி

**வீட்டு வேலைகளில் குழந்தைத் தொழிலாளர்களை பயன்படுத்தக் கூடாது என்பதை வலியுறுத்தி விழிப்புணர்வு கூட்டம் மற்றும் மனிதச்சங்கிலி 29-03-2010 அன்று சென்னையில் நடைபெற உள்ளது.**

---

வீட்டு வேலைகளில் குழந்தைத் தொழிலாளர்களை பயன்படுத்துவது சட்டப்படி குற்றம். இதை வலியுறுத்தி 29-03-2010 அன்று பிற்பகலில் சென்னை அண்ணாநகரில் விழிப்புணர்வு கூட்டம் மற்றும் மனிதச்சங்கிலி நிகழ்ச்சி தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. தா. மோ. அன்பரசன் அவர்கள் தலைமையிலும், மாநகர மேயர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

யுனிசெப், சேவ் த சில்ட்ரன், அருணோதயா ஆகிய தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து தொழிலாளர் துறை நடத்தும் இந்த விழிப்புணர்வுக் கூட்டம் 29-03-2010 அன்று பிற்பகல் 3.30 மணிக்கு சென்னை அண்ணாநகரில் உள்ள அண்ணா ஆதர்ஷ் மகளிர் கல்லூரியில் நடைபெற உள்ளது. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. தா. மோ. அன்பரசன் அவர்கள் தலைமையிலும் சென்னை மாநகர மேயர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் முன்னிலையிலும் நடைபெறும் இக்கூட்டம் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை செயலர் திரு ட்டி. பிரபாகர ராவ், இ.ஆ.ப., தொழிலாளர் ஆணையர் திரு. ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., கூடுதல் தொழிலாளர் ஆணையர், தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை தலைமை ஆய்வர் திரு ரகுநாதன், காவல் துறை கூடுதல் ஆணையர் திரு சகீல் அக்தர் ஐ.பி.எஸ்., சென்னை பல்கலைக்கழக மாணவர் ஆலோசனை இயக்குநர் டாக்டர் ராஜா உசைன், யுனிசெப் நிறுவனத்தின் தமிழக தலைமை அலுவலர் டாக்டர். சதிஷ்குமார், ''சேவ் த சில்ட்ரன்'' தலைமை செயல் அலுவலர் திரு தாமஸ் சேண்டி உட்பட பல்வேறு துறைகளின் அலுவலர்கள் பங்கேற்று சிறப்புரை வழங்க உள்ளனர். இந்தக் கருத்தரங்கத்தில் சென்னை மாநகராட்சியில் செயல்படும் சுய உதவிக் குழு உறுப்பினர்கள், தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள், அடுக்குமாடி குடியிருப்புகளின் உரிமையாளர்கள் சங்க நிர்வாகிகள் உட்பட பலரும் பங்கேற்க உள்ளனர்.

விழிப்புணர்வு கூட்டத்தைத் தொடர்ந்து மாலை 4 மண அளவில் சென்னை அண்ணா நகர் ரவுண்டானா முதல் திருமங்கலம் போக்குவரத்து சிக்னல் வரை மனிதச் சங்கிலி நடைபெற உள்ளது. இந்த மனிதச் சங்கிலி நிகழ்ச்சியில் அண்ணா ஆதர்ஷ் மகளிர் கல்லூரி மாணவிகள், கந்தசாமி கல்லூரி மாணவ/மாணவியர்கள், வள்ளியம்மை கல்லூரி மாணவியர், டி.ஜி வைஷ்ணவா கல்லூரி மாணவியர்கள் மற்றும் சுய உதவிக் குழு உறுப்பினர்கள், பொது மக்கள் உட்பட சுமார் 3000 பேர் பங்கேற்க உள்ளளர். வீடுகளில் குழந்தைத் தொழிலாளர்களை பணியில் அமர்த்தக் கூடாது என்பதை வலியுறுத்தி இந்த நிகழ்ச்சி நடத்தப்படுகின்றது.

//

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை 9

## PROGRAMME SCHEDULE - HUMAN CHAIN MEETING

**Date : 29.03.2010** **Time: 3.30 P.M to 4.15 P.M**

| | | |
|---|---|---|
| **Venue:** | : | **Anna Adharsh Women's College Auditorium, Anna Nagar, Chennai -40.** |
| Welcome Address | : | **Thiru Hans Raj Verma, I.A.S.,**<br>Commissioner of Labour |
| Felicitation | : | 1) **Dr. Jayashree Ghosh,**<br>Principal,<br>Anna Adharsh College for Women,<br><br>2) **Dr. N. Raja Hussain,**<br>Director,<br>University Students Advisory Bureau,<br>University of Madras, Chennai-5.<br><br>3) **Thiru Thomas Chandy,**<br>Chief Executive Officer,<br>Save the Children, India.<br><br>4) **Dr. Satish Kumar,**<br>State Repersentative,<br>UNICEF for Tamil Nadu & Kerala<br><br>5) **Thiru MD. Shakeel Akhter, I.P.S.,**<br>Additional Commissioner of Police (Law & Order)<br>Chennai. |
| Presidential Address | : | 1) **Dr. T. Prabakara Rao, I.A.S.,**<br>Principal Secretary to Government,<br>Labour and Employment Department |
| Special Address | | 2) **Thiru M. Subramanian,**<br>His Worshipful Mayor of Chennai Corporation. |
| Key Note Address | : | **Thiru T.M.Anbarasan,**<br>Hon'ble Minister for Labour, |
| Vote of Thanks | : | **Thiru P. Karupasamy, C.S.S.,**<br>Addl. Commissioner of Labour |

**HUMAN CHAIN - 4.15 P.M. TO 5.15 P.M.**